SJK (T) TASEK PERMAI
14120 SIMPANG AMPAT
COMMITTED TOWARDS SUCCESS

***உறவுக் கடிதம்***

<u>உமது பிறந்த நாளுக்கு பரிசு அனுப்பி வைத்த மாமாவுக்கு நன்றி கூறி கடிதம் எழுதுக.</u>

*ஷாமினி சந்திரன்*

ச. நெடுஞ்செழியன்,
6, தாமான் புத்திரி கூனோங்,
14120 சிம்பாங் அம்பாட்,
பினாங்கு.
01.06.2021

அன்புள்ள மாமாவுக்கு,

வணக்கம். இவ்விடம் நானும் குடும்பத்தினர் யாவரும் ஆண்டவன் அருளால் நலமுடன் இருக்கிறோம். அங்கு நீங்களும் அத்தையும் குழந்தைகளும் நலமுடன் இருக்க இறைவனை ______________________. கீதாவும் முரளியும் எப்படி இருக்கிறார்கள்? கீதா நன்றாகப் படிக்கிறாளா? முரளி இன்னும் குறும்பு செய்து கொண்டு இருக்கிறானா?

மாமா, என் பிறந்த நாள் ______________________ நீங்கள் அனுப்பி வைத்த 'பாக்கர்' பேனா எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. '______________________' பேனா வாங்க வேண்டும் என்று நீண்ட நாள் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேன். என் ஆசையை நிறைவேற்றும் வகையில் நீங்கள் இப்பரிசினை வழங்கியுள்ளீர்கள். உங்களுக்கு என் ______________________ நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் எனக்கு வழங்கிருக்கும் இப்பேனாவை என் உயிர் போல் ______________________ வைத்திருப்பேன். இவ்வாண்டு என் வகுப்பாசிரியர் ______________________ ஒரு சிலரைப் பேனாவால் எழுத அனுமதித்துள்ளார். என் எழுத்து அழகாகவும் பிழைகளின்றியும் இருப்பதால் என்னையும் பேனாவால் எழுத

LIVEWORKSHEETS


அனுமதித்துள்ளார். நாளையிலிருந்து நீங்கள் ______________________ இப்பேனாவால்தான் பள்ளிப் பாடங்களை எழுதப் போகிறேன்.

மாமா, ஒவ்வோர் ______________________ என் பிறந்த நாளை மறவாமல் எனக்குப் பிடித்தமான பரிசுகளை வழங்கி என்னை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறீர்கள். உங்கள் அன்பை என்னால் மறக்கவே முடியாது.

நீங்கள் அனுப்பிய பரிசுக்கும் உங்கள் அன்புக்கும் என் உளமார்ந்த ______________________ தெரிவித்துக் கொண்டு இத்துடன் முடிக்கிறேன்.

இப்படிக்கு,
உங்கள் பாசமுள்ள,

______________________




ஆக்கம் : ஷாமினி சந்திரன்

வகுப்பு : படிநிலை 2

LIVEWORKSHEETS